# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No.29/2021 தேதி- 10.02.2026

(D.W.2)-கில்பிரட் ஜாண் முத்துபிரகாஷ்

குறுக்கு விசாரணை

1. இவ்வழக்கின் பிரதிவாதியான வில்லியம் என்பவரை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் சிறு வயதில் இருந்தே பழக்கம். என் வீட்டிற்கு அருகாமையில் தான் மேற்சொன்ன வில்லியம் வசித்து வருகிறார் என்றால் சரிதான். மேற்சொன்ன வில்லியம் எனக்கு உறவினர் என்றால் சரிதான். மேற்சொன்ன வில்லியம் வாடகைக்கு கடை நடத்தி வரும் விவரம் தெரியுமா என்றால் 25 ஆண்டுகளாக தெரியும். மேற்சொன்ன கடையில் பெயிண்ட் அடிக்கப்பட்ட விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அவ்வழியாக சென்று வரும்போது பார்த்தேன். நான் பார்த்தாக சொல்லியுள்ள நிலையில் எந்த ஆண்டு, எந்த மாதம் என்று சொல்ல முடியுமா என்றால் நினைவில்லை. மேற்சொன்ன வாடகை கடையில் சட்டர் எந்த ஆண்டு அமைத்தார் என்றால் நினைவில்லை. மேற்சொன்ன கடையில் இருந்து வில்லியம் என்பவரை அப்புறப்படுத்த முயற்சி செய்தாக சொல்லியுள்ள நிலையில் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். மேற்சொன்ன விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அவ்வழியாக ஆட்டோவில் சவாரி சென்ற போது பார்த்தேன். மேற்சொன்ன கடையின் கூரையை எந்த ஆண்டு மாற்றி அமைத்தார் என்றால் நினைவில்லை. நான் மேற்சொன்னவாறு வழக்கின் பிரதிவாதி மேற்சொன்ன கடையில் எந்தவித மாற்றமும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. மேற்சொன்ன கடை அடுக்கு மாடி கட்டிடம் என்றால் சரிதான். மேற்சொன்ன வில்லியம் நடத்தி வரும் கடை தரை தளத்தில் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன கடை எந்த இடத்தில் உள்ளது என்றால் கருங்கல் காவல் நிலையத்தின் எதிரில் சற்று தொலைவில் அமைந்துள்ளது. மேற்சொன்ன கடை கருங்கல் ஜங்ஷனிடம் அமைந்துள்ளது என்றால் இல்லை. கருங்கல் ஜங்ஷனில் ராஜீவ்காந்தி சிலை உள்ளது என்றால் சரிதான். கருங்கல் ஜங்ஷனில் உள்ள கடைகள் பொதுவாக வாடகை ரூ.7000/- முதல் ரூ.9000/- வரை வாடகைக்கு வழங்கப்படும் என்றால் இல்லை. ரூ.2000/- தான் வாடகை இருக்கும். மேற்சொன்ன சங்கதிகள் அனைத்தும் நான் வில்லியம் என்பவர்

என் உறவினர் என்பதாலும், என் வீட்டு அருகாமையில் வசிப்பவர் என்பதாலும் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.